முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2019 சனவரி

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Financial Accounting and Reporting)

2019-01-26
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை எழுதவும்.***

(3) ***விடைகள்*** *உமக்குத் தரப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின்*** *நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

தனி வியாபார உரிமையாளரான **சிறிவர்த்தன** தமது மொத்த வியாபாரத்தினை 2016 இல் ஆரம்பித்தார். 2017 ஏப்ரல் 01 மற்றும் 2018 மார்ச் 31 ஆகிய திகதிகளில் அவரின் வியாபாரத்தின் நிகரச் சொத்துக்கள் முறையே ரூ. 3.2 மில்லியன் மற்றும் ரூ. 4.5 மில்லியன் ஆகும். 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டு காலப்பகுதியில் ரூ. 0.5 மில்லியன் எடுப்பனவுகளை அவர் மேற்கொண்டிருந்தார். மேலும், கவனத்திற் கொள்ளப்படும் ஆண்டின் காலப்பகுதியில் அவர் காலத்திற்குக் காலம் மேலதிக மூலதனமாக மொத்தம் ரூ. 1 மில்லியனை வியாபாரத்தில் இட்டிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) இலாபத்தினைக் கணித்தறிதலில் நிதிசார் மூலதனப் பராமரிப்புக் (financial capital maintenance) கோட்பாட்டினை பௌதிக மூலதனப் பராமரிப்புக் (physical capital maintenance) கோட்பாட்டிலிருந்து **வேறுபடுத்துக.** (03 புள்ளிகள்)

(b) நிதிசார் மூலதன பராமரிப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் **சிறிவர்த்தனவின்** வியாபாரம் உழைத்த இலாபத்தினைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

நிலைபேற்று அறிக்கையிடலானது (Sustainability reporting) நிறுவனங்கள் பல நிலைபேற்று பிரச்சினைகளின் (Issues) தாக்கங்களை கவனத்திற்கொள்வதற்கு ஏதுவாக இருப்பதுடன், அவை முகங்கொடுக்கும் இடர்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் பற்றி அதிக வெளிப்படைத் தன்மையைக் கொண்டிருப்பதற்கும் ஏதுவாக இருக்கின்றன.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

(a) ''நிலைபேற்று அறிக்கையிடல்'' என்றால் என்னவென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) நிலைபேற்று அறிக்கையிடலின் இரண்டு (02) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட சௌபாக்கியா ஹோல்டிங் (SHL)** கம்பனியின் கணக்காளரான திரு. **புண்ணியசிறி** கீழ்வரும் சம்பவங்களுக்கு முகங்கொடுத்துள்ளார்.

(a) **SHL** ஆனது 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது அதன் பிரதான வாடிக்கையாளருக்கு ரூ. 7.5 மில்லியன் பெறுமதியான பொருட்களைப் பட்டியலிட்டிருந்தது (invoiced). எனினும் அந்தப் பொருட்கள் 2018 ஏப்ரல் 10 ஆந் திகதி வரை அந்த வாடிக்கையாளருக்கு விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை.

(b) **SHL** கம்பனி 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி **நிலையன்ஸ் பாங்க் PLC** யின் பங்குகளில் அது கொண்டிருந்த முதலீட்டிலிருந்து ரூ. 2.7 மில்லியனை பங்கிலாபமாகப் பெற்றது. எனினும், பங்கிலாபத்தை பங்குதாரர்கள் அங்கீகரிப்பதற்கான **நிலையன்ஸ் பாங்க் PLC** யின் பொதுக் கூட்டம் 2018 மார்ச் 30 இல் நடைபெற்றது.

(c) **SHL கம்பனி** சேவைகள் வழங்குவதற்காக **வரையறுக்கப்பட்ட பெரேரா கம்பனியுடன்** 4 வருடத்திற்கான சேவை உடன்படிக்கை ஒன்றினை 2017 ஏப்ரல் 01 இல் ஏற்படுத்தியிருந்தது. 4 ஆண்டு காலத்திற்குமான ஆரம்ப சேவைக் கட்டணம் ரூ.1 மில்லியன். 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் கிரயமாக செலவுசெய்த தொகை ரூ. 150,000/- அடுத்த 03 ஆண்டுகளில் ரூ.450,000/- கிரயமாக இறுக்கப்படும்.

***நீங்கள் செய்யவேண்டியது:***

LKAS 18 – வருமானம் எனும் நியமத்திற்கு அமைய, 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு நிகழ்வும் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டுமா என **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 04

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட டோக்கியோ டிரேடிங்** இன் முற்றடக்க வருமானக் கூற்றிலிருந்தான பிரித்தெடுப்பு கீழ்வருமாறு:

**வ/ப டோக்கியோ டிரேடிங்**
**2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**முற்றடக்க வருமானக் கூற்றின் பிரித்தெடுப்பு**

| | **ரூ.** |
|---|---|
| விற்பனை | 760,000 |
| விற்பனைக் கிரயம் | (643,000) |
| **மொத்த இலாபம்** | **117,000** |
| ஏனைய வருமானம் - முதலீட்டு வருமானம் | 850 |
| விநியோகச் செலவுகள் | (30,000) |
| நிருவாகச் செலவுகள் | (32,000) |
| நிதிச் செலவுகள் | (6,500) |
| **வரிக்கு முன் இலாபம்** | **49,350** |

2018 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆகிய திகதிகளில் கம்பனியின் நிதிநிலைக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்ட மீதிகள் கீழ்வருமாறு:

| | **2018 மார்ச் 31 (ரூ.)** | **2017 மார்ச் 31 (ரூ.)** |
|---|---|---|
| தொக்குகள் | 132,000 | 125,000 |
| வியாபார வருமதிகள் | 205,000 | 218,000 |
| வியாபார சென்மதிகள் | 142,000 | 135,000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 3,500 | 2,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம் ரூ.12,500/-.

(2) நிதிச் செலவுகள், தனிச்சதாரர்களுக்கு செலுத்திய வட்டியைப் பிரதிபலிக்கின்றன.

(3) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவுகள் ரூ. 8,000/-.

(4) எல்லாக் கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியவை:**

நேர் முறையைப் (direct method) பாவித்து 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வ/ப **டோக்கியோ டிரேடிங் கம்பனியின்** தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் (operating activities) இருந்தான காசுப்பாய்வுகளைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2018 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆகிய திகதிகளில் / முடிவடைந்த ஆண்டுகளுக்கான **வ/ப எக்கோ புரோக்டெக் லங்கா (தனி.) கம்பனியின்** நிதிநிலைக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன:

**வ/ப எக்கோ புரொக்டெக் லங்கா (தனி.)கம்பனி**
**நிதிக் கூற்றுக்களிலிருந்தான பிரித்தெடுப்புக்கள்** *(ரூ.'000)*

| **ஆண்டு முடிவு** | **2018 மார்ச் 31** | **2017 மார்ச் 31** |
|---|---|---|
| புரள்வு (Turnover) | 220,650 | 199,500 |
| விற்பனைக் கிரயம் | 147,835 | 137,655 |
| மொத்த இலாபம் | 72,815 | 61,845 |
| வட்டி மற்றும் வருமான வரிக்கு முன் இலாபம் | 17,750 | 18,220 |
| ஆண்டிற்கான இலாபம் | 15,620 | 15,820 |
| **திகதியில்** | **2018 மார்ச் 31** | **2017 மார்ச் 31** |
| தொக்குகள் | 12,200 | 10,550 |
| வியாபார வருமதிகள் | 28,200 | 22,500 |
| பங்குதாரர்கள் உரிமையாண்மை | 121,030 | 105,410 |
| வங்கிக் கடன் | 9,950 | 10,350 |
| குறிப்பிடு மூலதனம் (1,000,000 சாதாரண பங்குகள்) | 100,000 | 100,000 |

கீழ்வரும் தொழிற்றுறைச் சராசரிகளும் (industry averages) இனங்காணப்பட்டிருந்தன:

| | |
|---|---|
| மொத்த இலாப வீதம் | 40% |
| நிகர இலாப வீதம் | 12% |
| ROCE – தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாய் | 8% |
| தொக்குப் புரள்வு விகிதம் | 10 தடவை |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் | 9 தடவை |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 40 நாட்கள் |

சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன எனவும் ஆண்டிற்கு பிற முற்றடக்க வருமானம் எதுவுமில்லை எனவும் கருதிக்கொள்க.

***நீங்கள் செய்யவேண்டியது:***

மேலே இனங்காணப்பட்ட தொழிற்றுறைச் சராசரிகளைக் கவனத்திற்கொண்டு, 2018 மார்ச் 31 இல் / முடிவடைந்த ஆண்டிற்கான **வ/ப எக்கோ புரொக்டெக் லங்கா கம்பனியின்** செயற்பாடுகளைப் **பகுப்பாய்வு செய்க.** (10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட சியெஸ்ரோ கிரியேஷன்ஸ் (தனி) கம்பனியின்** 2018 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆகிய திகதிகளில் நிதிநிலைக் கூற்றுக்களும் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்றின் பிரித்தெடுப்புகளும் கீழே தரப்பட்டுள்ளன:

**வரையறுக்கப்பட்ட சியெஸ்ரோ கிரியேஷன்ஸ் (தனி) கம்பனி**

**நிதிநிலைக் கூற்று** *(ரூ.'000)*

| மார்ச் 31 ஆந் திகதி | 2018 | 2017 |
|---|---|---|
| **சொத்துக்கள்:** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 4,740 | 4,300 |
| திரள் தேய்மானம் | (2,060) | (1,410) |
| **முன்கொணரற் பெறுமதி** | **2,680** | **2,890** |
| | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| தொக்குகள் | 2,370 | 1,415 |
| வியாபார வருமதிகள் | 4,450 | 2,536 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,280 | 1,320 |
| | **9,100** | **5,271** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **11,780** | **8,161** |
| | | |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்:** | | |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் – சாதாரண பங்குகள் | 2,000 | 2,000 |
| கைக்கொள் இலாபம் | 3,660 | 1,460 |
| | **5,660** | **3,460** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்** | | |
| நீண்டகாலக் கடன்கள் | 1,000 | - |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடை ஏற்பாடு) | 590 | 500 |
| பிற்போடப்பட்ட வரிப் பரிப்புக்கள் | 720 | 500 |
| | **2,310** | **1,000** |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| வியாபார சென்மதிகள் | 2,760 | 2,851 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 1,050 | 850 |
| | **3,810** | **3,701** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **11,780** | **8,161** |

**2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**முற்றடக்க வருமானக் கூற்றிலிருந்து பிரித்தெடுப்பு**

| | **ரூ.'000** |
|---|---|
| வட்டி மற்றும் வருமான வரிக்கு முன் இலாபம் | 2,900 |
| வட்டிச் செலவுகள் | (250) |
| **வருமான வரிக்கு முன் இலாபம்** | **2,650** |
| வருமான வரி | (450) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **2,200** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) ஆண்டிற்கான வருமான வரி, 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பிற்போடப்பட்ட வரிச் செலவுகளை உள்ளடக்குகின்றது.

(2) 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது ரூ. 550,000/- கிரயமுடைய உபகரணம் ஒன்று ரூ. 400,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனைத் திகதியில் அந்த உபகரணத்தின் முன்கொணரற் பெறுமதி ரூ. 200,000/- ஆகும்.

(3) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ஏனைய முற்றடக்க வருமானம் எதுவுமில்லை. அத்துடன் ஆண்டின் இறுதியில் அட்டுறுவான வட்டிச் செலவுகள் எதுவுமில்லை.

(4) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் பணிக்கொடைக்கான கொடுப்பனவுகள் எதுவும் செய்யப்படவில்லை.

***நீங்கள் செய்யவேண்டியது:***

<u>நேரில் முறையைப்</u> (Indirect method) பாவித்து 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சியெஸ்ரா கிரியேஷன்ஸ் (தனி) கம்பனியின்** காசுப்பாய்வுகள் கூற்றினைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

## வினா 07

(A) 2017 சனவரி 01 ஆந் திகதி **KEL லீசிங் கம்பனி** மோட்டார் வாகனமொன்றினை 5 வருட நிதிக் குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் **பெரேராவுக்கு** விற்பனை செய்தது. மோட்டார் வாகனத்தின் காசு விற்பனை விலை ரூ. 2.5 மில்லியன் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 31 இல் வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணம் ரூ. 781,409.75 செலுத்தப்பட வேண்டும். குத்தகைக்கான வருடாந்த வட்டி வீதம் 17% ஆகும். தவணைக்கட்டணங்களை **பெரேரா** உரிய திகதிகளில் செலுத்திவருகின்றார்.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

2018 டிசெம்பர் 31 ஆந் திகதியில் / முடிவடைந்த ஆண்டிற்கான KEL கம்பனியின் ஏடுகளில் காணப்படுகின்றவாறு கீழ்வரும் கணக்குகளைத் **தயாரிக்குக**:

(a) குத்தகைக் கடன்பட்டோர் கணக்கு

(b) உழைக்கப்படாத நிதி வருமானக் கணக்கு (un-earned Finance Income Account) (06 புள்ளிகள்)

(B) **வ/ப றிலையன்ஸ் பாட்னர்ஸ் (தனி) கம்பனி (RPL)** சவர்க்காரம் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. **RPL** இன் 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் வழங்குவதற்காக 2018 மே 10 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

**RPL** தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) முன்னைய ஆண்டில் நிதி முகாமையாளரும் களஞ்சிய முகாமையாளரும் இணைந்து தொக்குகள் தொடர்பில் மேற்கொண்ட மோசடி பற்றி 2018 மே 05 ஆந் திகதி தெரியவந்தது. இந்த மோசடி காரணமாக ரூ. 35.5 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இம்மோசடி காரணமாக அதே தொகையினால் தொக்குப் பெறுமதி மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

(2) 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்திலிருந்து ஊழியர்களுக்கான செயற்பாட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூ. 4 மில்லியன் **RPL** பணிப்பாளர் சபையினால் 2018 ஏப்ரல் 15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. வரைபு நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இது கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

***நீங்கள் செய்யவேண்டியது:***

LKAS 10 – அறிக்கையிடற் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள் நியமத்திற்கு அமைய, மேற்படி ஒவ்வொரு நிகழ்வும் **RPL** இன் 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்படுமென **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**கிறீன் கார்டன் PLC** கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்தப்பட்ட ஒரு கம்பனியாகும். இக்கம்பனியின் 2018 மார்ச் 31 இலான பரீட்சை மீதி கீழ்வருமாறு:

**கிறீன் கார்டன் PLC**

**2018 மார்ச் 31 இல் பரீட்சைமீதி** *(ரூ.'000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் - 2,000,000 பங்குகள் | | 40,000 |
| 2017 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 2,500 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :** | | |
| காணியும் கட்டடமும் (காணிப் பெறுமதி ரூ. 20 மில்லியன்) | 30,000 | |
| மோட்டார் வாகனம் | 10,000 | |
| அலுவலக உபகரணம் | 3,500 | |
| **திரள் தேய்மானம் - 2017 ஏப்ரல் 01 இல்:** | | |
| கட்டடம் | | 6,000 |
| மோட்டார் வாகனம் | | 2,000 |
| அலுவலக உபகரணம் | | 950 |
| மூலதனப் புத்துருவாகும் வேலை | 600 | |
| தொக்குகள் - 2018 மார்ச் 31 இல் (கிரயத்தில்) | 25,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 62,000 | 45,000 |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2017 ஏப்ரல் 01 இல் | | 700 |
| அட்டுறு செலவுகள் | | 1,000 |
| வரிமதிப்பாண்டு 2016/17 ற்காகச் செலுத்த வேண்டிய வருமான வரி | | 1,200 |
| வங்கிக் கடன் | | 3,000 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 200 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 300 |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 174,500 | 262,500 |
| சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபம் | 1,000 | |
| நிருவாகச் செலவுகள் | 20,200 | |
| விநியோகச் செலவுகள் | 26,500 | |
| பிற தொழிற்பாட்டுச் செலவுகள் | 1,850 | |
| நிதிச் செலவுகள் | 3,800 | |
| செலுத்திய வருமான வரி | 6,000 | |
| | **365,150** | **365,150** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) வாடிக்கையாளர் ஒருவருக்கு பொருட்களை விநியோகிக்கும்போது 2017 யூன் 30 ஆந் திகதி விபத்துக்குள்ளான விநியோக லொறியினை, கம்பனி 2017 அக்டோபர் 31 ஆந் திகதி ரூ. 200,000/- இற்கு விற்பனை செய்தது. இந்த லொறி ரூ. 1.2 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2017 ஏப்ரல் 01 இல் அதன் திரள் தேய்மானம் ரூ. 600,000/- ஆகவும் இருந்தது. கம்பனி சேதத்திற்கான இழப்பீடாக காப்புறுதிக் கம்பனியிடமிருந்து லொறியின் கொள்வனவுக் கிரயத்தின் காற்பங்கிற்குச் (¼) சமனான ஒரு தொகையினைப் பெற்றிருந்தது. பெறப்பட்ட காப்புறுதி இழப்பீட்டுத் தொகையும் விற்பனைப் பெறுவனவும் விற்பனைக் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டன. இவை தவிர லொறியின் விற்பனை தொடர்பில் கணக்கேடுகளில் எதுவித பதிவுகளும் மேற்கொள்ளப்பட வில்லை.

(2) 2017 யூன் 01 இல் கம்பனி ரூ. 1.5 மில்லியன் பெறுமதியான புதிய கணினி மென்பொருளொன்றினை கொள்வனவு செய்தது. அதே தினத்தில், தமது வியாபாரத்திற்கு ஏற்ற வகையில் அதனை விருத்திசெய்ய ரூ.300,000/- இனை கம்பனி செலவுசெய்தது. கணினி மென்பொருளின் கொள்வனவு விலை மற்றும் விருத்தியாக்கல் கிரயம் என்பன கொள்வனவுக் கணக்கில் பதிவுசெய்யப்பட்டன.

(3) தனியான கட்டடமொன்றினை நிருமாணிப்பதற்காக 2017 அக்டோபர் 01 ஆந் திகதி கம்பனி ரூ.3,000,000/- கடன் பெற்றதுடன் அதே தினத்தில் நிருமாண வேலைகளையும் ஆரம்பித்தது. 2018 மார்ச் 31 ஆந் திகதியில் இந்த நிருமாணம் தொடர்பில் ரூ.600,000/- செலவு செய்யப்பட்டிருந்த துடன், அது மூலதனப் புத்துருவாகும் வேலையாக வகைப்படுத்தப்பட்டது. கடனுக்கான வட்டி வீதம் ஆண்டுக்கு 12 % ஆகும். ஆண்டின் காலப்பகுதியில் மேற்படி கடனுக்கான மீள் கொடுப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படாததுடன், இந்தக் கடன்மீது நடப்பு ஆண்டிற்கான வட்டி நிதிச் செலவுக் கணக்கில் வரவுப்பதிவும் அட்டுறு செலவுக் கணக்கில் செலவுப் பதிவும் செய்யப்பட்டது.

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான தேய்மானம் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 20 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனம் | : | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | : | 05 ஆண்டுகள் |
| கணினி மென்பொருள் | : | 03 ஆண்டுகள் |

(5) 2018 மார்ச் 31 இல் இருந்த தொக்கின் ரூ.500,000/- கிரயமான பகுதி வழக்கிழந்து காணப்பட்டதுடன் அவை 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி ரூ. 100,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது.

(6) 2018 மார்ச் 31 இல் கம்பனிக்கு ரூ. 2,000,000/- செலுத்த வேண்டியிருந்த ஒரு வாடிக்கையாளர் 2018 மே 05 ஆந் திகதி வங்குரோத்து அடைந்தவராக பிரகடனம் செய்யப்பட்டார். எனவே, அவரிடமிருந்து வருமதியாகவுள்ள முழுத் தொகையும் அறவிடப்பட முடியாததாக உள்ளது. அத்துடன், 2018 மார்ச் 31 இல் எஞ்சியுள்ள வியாபார வருமதி மீதியின் 5 % பொதுவான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(7) 2017/18 ஆண்டின் காலப்பகுதியில் கம்பனிக்கு எதிராக வாடிக்கையாளர் ஒருவர் வழக்குத் தொடர்ந்திருந்தார். 2018 மே 05 இல் வழங்கப்பட்ட அதன் தீர்ப்புக்கு அமைய அந்த வாடிக்கையாளருக்கு ரூ.260,000/- இனை கம்பனி இழப்பீடாகச் செலுத்த வேண்டும்.

(8) 2018 ஏப்ரல் மாதத்திற்கான காப்புறுதிக் கொடுப்பனவுப் பெறுமதி ரூ. 110,000/- காப்புறுதிச் செலவினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இது நிருவாகச் செலவுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(9) வரிமதிப்பாண்டு 2017/18 இற்கான கம்பனியின் வருமான வரிப் பரிப்பு ரூ. 6,500,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(10) 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 2018 மார்ச் 31 ஆந் திகதியில் இருந்த ஒவ்வொரு சாதாரண பங்கிற்கும் ரூ. 1/- வீதம் இறுதிப் பங்கிலாபம் வழங்கப் பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

(11) நிதிக்கூற்றுக்கள், வழங்குவதற்காக 2018 மே 30 இல் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

மேலுள்ள தகவல்களைக் கருத்திற்கொண்டு,

***நீங்கள் செய்யவேண்டியவை:***

பிரசுரிப்புக்கு ஏற்ற வடிவில் **கிறீன் கார்டன் PLC** தொடர்பில் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (10 புள்ளிகள்)

(b) 2018 மார்ச் 31 இல் நிதிநிலைக் கூற்று (07 புள்ளிகள்)

(c) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (03 புள்ளிகள்)

(d) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் கூற்று (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) **2018** மார்ச் 31 ஆம் திகதியில் **இந்தோகெம் PLC (ICL)** மற்றும் **வ/ப டகசாகோ (தனி) கம்பனி (TL)** ஆகிய கம்பனிகளின் நிதிநிலைக் கூற்றுக்களின் பிரித்தெடுப்புகள் கீழ்வருமாறு:

2018 **மார்ச் 31 இல்**

**நிதிநிலைக் கூற்றுக்கள்** *(ரூ.'000)*

| | ICL | TL |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 55,000 | 15,000 |
| திரள் தேய்மானம் | (12,000) | (6,000) |
| முன்கொணரற் பெறுமதி | 43,000 | 9,000 |
| **TL** இல் முதலீடு | 25,000 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| தொக்குகள் | 20,100 | 20,500 |
| **TL** க்கு வழங்கப்பட்ட குறுங்காலக் கடன்கள் | 5,500 | - |
| வியாபார வருமதிகள் | 34,750 | 10,500 |
| காசும் காசுச் சமானங்களும் | 6,500 | 4,600 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **134,850** | **44,600** |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் – சாதாரண பங்குகள் | 82,000 | 20,000 |
| கைக்கொள் இலாபம் | 15,750 | 6,700 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்:** | | |
| வங்கிக் கடன் | 10,200 | - |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| வியாபார சென்மதிகள் | 13,100 | 8,000 |
| வங்கிக் கடன் | 5,200 | - |
| **ICL** இடமிருந்தான குறுங்காலக் கடன் | - | 5,500 |
| ஏனைய சென்மதிகள் | 8,600 | 4,400 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **134,850** | **44,600** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2017 ஏப்ரல் 01 இல் **TL** இன் சாதாரண பங்கு மூலதனத்தின் 80 % இனை **ICL** ரூ. 25 மில்லியனுக்கு கொள்வனவு (acquired) செய்தது.

(2) சுவீகரிப்புத் (acquisition) திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர்மதிப்பு ரூ.4.42 மில்லியன் ஆகும். சுவீகரிப்புத் திகதியில் கைக்கொள் இலாபம் ரூ.2.1 மில்லியனாக இருந்ததுடன் **TL** இன் இனங்காணத்தகு நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு அவற்றின் ஏட்டுப் பெறுமதிக்குச் சமனாகவும் இருந்தது.

(3) 2018 மார்ச் 31 இல், **TL** கம்பனி **ICL** இலிருந்து கொள்வனவு செய்த ரூ. 3 மில்லியன் பெறுமதியான தொக்குகள் விற்கப்படாது கம்பனிவசம் இருந்தன. **ICL** விற்பனை விலையில் 20% இலாபம் வைத்து **TL** க்கு பொருட்களை விற்பனை செய்தது.

(4) 2017 ஏப்ரல் 01 இல் **TL,** ஆண்டுக்கு 15 % வட்டிக்கு ரூ. 5.5 மில்லியன் கடனை **ICL** இடமிருந்து பெற்றிருந்தது. ஆண்டின் காலப்பகுதியில் இந்தக் கடன்மீது ஆண்டிற்கான வட்டி செலுத்தப்பட்ட போதிலும் கடன் மீள்கொடுப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(5) **ICL** இன் வியாபார வருமதிகள் **TL** இடமிருந்து கிடைக்க வேண்டிய ரூ. 2.5 மில்லியனை உள்ளடக்கியிருந்தது. **TL** கம்பனி ரூ. 1 மில்லியனுக்கான காசோலையொன்றினை **ICL** க்கு அனுப்பியிருந்தபோதிலும் 2018 மார்ச் 31 வரை அந்தக் காசோலை **ICL** க்கு கிடைக்கவில்லை.

(6) **ICL** இன் கைக்கொள் இலாபம் **TL** இடமிருந்து 2018 மார்ச் 01 ஆந் திகதி பெற்ற இடைக்காலப் பங்கிலாபமான ரூ. 1 மில்லியனை உள்ளடக்குகின்றது. **TL** இனால் ஆண்டிற்கான இலாபத்தில் இருந்து பங்கிலாபங்கள் செலுத்தப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ஒன்றித்தல் மீதான நன்மதிப்பினைக் (goodwill on consolidation) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(b) 2018 மார்ச் 31 இல் ஒன்றித்த நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.** (14 புள்ளிகள்)

(B) **இந்தோகெம் PLC (ICL)** மற்றும் **வ/ப டகசாகோ (தனி) கம்பனி (TL)** ஆகியன தொடர்பில் கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

| | **ICL (ரூ.'000)** | **TL (ரூ.'000)** |
|---|---|---|
| விற்பனை | 175,000 | 89,000 |
| கொள்வனவு | 64,000 | 36,000 |

(1) மொத்தக் கொள்வனவின் 80 % கடன் கொள்வனவுகளாகும்.

(2) 2017 மார்ச் 31 இல் **ICL** மற்றும் **TL** இன் வியாபாரச் சென்மதிகள் முறையே ரூ. 12 மில்லியன் மற்றும் ரூ. 6 மில்லியன் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

இரு கம்பனிகளுக்கும் கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக**.:

(a) நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் (Current Assets Ratio)

(b) நெம்பு விகிதம் (Gearing Ratio)

(c) கடன்கொடுத்தோர் புரள்வு விகிதம் (Creditors' Turnover Ratio) (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |